IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

SC.NO.75/2022 P.W.1

| | | |
|---|---|---|
| NAME | - | விஜயபாஸ்கர் |
| FATHER'S NAME | - | மகேந்திரன் |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| CASTE | - | |
| OCCUPATION | - | |
| RELIGION | - | |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1872 of the 23rd day of January 2023.

முதல் விசாரணை.

நான் மேலரசன்பட்டு, மடிகம் கிராமத்தில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். எதிரி என்னுடைய பெரியப்பா. வழக்கில் இறந்த நபர் என்னுடைய தாத்தா ஆவார். சுமார் 1 வருடத்திற்கு முன்னால் என்னுடைய அக்கா தொலைபேசி மூலம்என்னுடைய தாத்தாவிற்கு அடிபட்டுள்ளதாக சொன்னார். அதன் பேரில் நான் என்னுடைய தாத்தா வீட்டிற்கு சென்ற போது அவரை அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு எடுத்து சென்றுள்ளதாக சொன்னார்கள். அதன் பிறகு நான் என் வீட்டிற்கு சென்று விட்டேன். என் தாத்தா எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.1 ஆகும். அதில் உள்ள விவரங்கள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் எழுதாத வெள்ளை பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

நான் என்னுடைய புகாரிலும், போலிசார் விசாரணையிலும் 22.01.2022 தேதி காலை சுமார் 9 மணிக்கு நான் கல்லாப்பாறை சென்று என் பெரியப்பா சின்னசாமியிடம் எனது மோதிரத்தை அடமானம் வைக்க வாங்கி சென்றதை கேட்ட போது என்னை பார்த்து தெவிடியா பையா எனது மோதிரத்தை கொடுங்க என்று கேட்டதாகவும் அதற்கு என்னை பார்த்து தெவிடியா பையா என் மகனை போய் கேளுடா என்று அசிங்கமாக திட்டினார். அப்போது என் தாத்தா சின்னவர் என்பவர் என் பெரியப்பாவை பார்த்து கடன் வாங்கின திருப்பி குடுக்க வேண்டும் என்று சொன்னார். பிறகு செல்வராஜ் வீட்டு முன்பு இருந்த என் தாத்தாவை என் பெரியப்பா தெவிடியா பையா நீ என்ன உன் பேரனுக்கு சப்போட்டா என்று கேட்டு கீழே கிடந்த மூங்கில் கொம்பால் என் தாத்தாவின் இடது கால் மீது அடித்தார். என் தாத்தா மயங்கி கீழே விழுந்தவரை பாாத்து என் பெரியப்பா சினனசாமி கையில் வைத்திருந்த மூங்கில் கோலை காட்டி இனிமேல் நகை பற்றி பேசினால் உன்னை கொலலாமல் விடமாட்டேன் என மிரட்டினார். என் தாத்தா மயங்கி கிடந்தவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் சேர்த்தாகவும் 04.02.2022 தேதி காலை 9.30 மணிக்கு என் தாத்தா சிகிச்சை பலனில்லாமல் இறந்து விட்டார் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரி என்னுடைய பெரியப்பா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -</u> இல்லை.

P REVATHY Digitally signed by P REVATHY DN: cn=P REVATHY, ou=VELLORE, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN

Additional District Judge (FTC),

Vellore.

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

SC.NO.75/2022 P.W.2

| | | |
|---|---|---|
| NAME | - | நந்தினி |
| HUSBAND'S NAME | - | விஜயபாஸ்கர் |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| CASTE | - | |
| OCCUPATION | - | |
| RELIGION | - | |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1872 of the 23rd day of January 2023.

முதல் விசாரணை.

நான் மேலரசன்பட்டு, மடிகம் கிராமத்தில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 என்னுடைய கணவர். எதிரி என்னுடைய தாத்தா. வழக்கில் இறந்த நபரும் என்னுடைய தாத்தா ஆவார். சுமார் 1 வருடத்திற்கு முன்னால் என்னுடைய கணவருக்கு அவருடைய அக்கா தொலைபேசி மூலம் என்னுடைய கணவரின் தாத்தாவிற்கு அடிபட்டுள்ளதாக சொன்னார். அதன் பேரில் என்னுடைய கணவர் தாத்தா வீட்டிற்கு சென்ற போது அவரை அடுக்கம்பாறை மருத்துவமனையில் சேர்த்துள்ளதாகவும் என்னிடம் சொன்னார். அதன் பிறகு 12 -13 நாட்கள் கழித்து 04.02.2022 தேதியில் இறந்து விட்டதாக சொன்னார். என் தாத்தா எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. என் தாத்தா இறந்தது சம்மந்தமாக புகார் எதுவும் கொடுக்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்த போது என் தாத்தா கீழே விழுந்ததால் மருத்துவமனையில் சேர்த்திருந்ததாகவும், மருத்துவமனையில் அவர் இறந்து விட்டதாகவும் சொன்னேன்.

சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

நான் போலிசார் விசாரணையில் 22.01.2022 தேதி காலை சுமார் 9 மணிக்கு என் கணவர் கல்லாப்பாறை சென்று அவரின் பெரியப்பா சின்னசாமியிடம் அடரது மோதிரத்தை அடமானம் வைக்க வாங்கி சென்றதை கேட்ட போது என் கணவரை பார்த்து தெவிடியா பையா எனது மோதிரத்தை கொடுங்க என்று கேட்டதாகவும் அதற்கு என் கணவரை பார்த்து தெவிடியா பையா என் மகனை போய் கேளுடா என்ற அசிங்கமாக திட்டினார். அப்போது என் தாத்தா சின்னவர் என்பவர் என் தாத்தா சின்னசாமியை பார்த்து கடன் வாங்கின திருப்பி குடுக்க வேண்டும் என்று சொன்னார். பிறகு செல்வராஜ் வீட்டு முன்பு இருந்த என் தாத்தா சின்னவரை என் தாத்தா சின்னசாமி தெவிடியா பையா நீ என்ன உன் பேரனுக்கு சப்போட்டா என்று கேட்டு கீழே கிடந்த மூங்கில் கொம்பால் என் தாத்தாவின் இடது கால் மீது அடித்தார். என் தாத்தா மயங்கி கீழே விழுந்தவரை பாாத்து என் தாத்தா சின்னசாமி கையில் வைத்திருந்த மூங்கில் கோலை காட்டி இனிமேல் நகை பற்றி பேசினால் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டினார். என் தாத்தா மயங்கி கிடந்தவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் என் கணவர் சேர்த்தாகவும் 04.02.2022 தேதி காலை 9.30 மணிக்கு என் தாத்தா சிகிச்சை பலனில்லாமல் இறந்து விட்டார் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரி என்னுடைய தாத்தா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.

P REVATHY Digitally signed by P REVATHY DN: cn=P REVATHY, ou=VELLORE, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN

Additional District Judge (FTC),

Vellore.

<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE</u>
<u>(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.</u>

<u>DEPOSITION OF WITNESS</u>

SC.NO.75/2022 P.W.3

| | | |
|---|---|---|
| NAME | - | லட்சுமி |
| HUSBAND'S NAME | - | சின்னசாமி |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| CASTE | - | |
| OCCUPATION | - | |
| RELIGION | - | |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1872 of the 23rd day of January 2023.

<u>முதல் விசாரணை.</u>

நான் கல்லாப்பாறை கிராமத்தில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். எதிரி என்னுடைய கணவர். அ.சா.1 என்னுடைய தங்கை மகன். அ.சா.2 என்னுடைய பேத்தி. வழக்கில் இறந்த நபரும் என்னுடைய அப்பா ஆவார். சுமார் 1 வருடத்திற்கு முன்னால் நான் கூலி வேலைக்கு சென்றிருந்த போது என்னுடைய அப்பா இறந்து விட்டதாக எனக்கு தகவல் வந்து நான் சென்று பார்த்தேன். என் அப்பாவிற்கு அடிபட்டது குறித்தும் அவரை மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்திருந்தது குறித்தும் எனக்கு யாரும் சொல்லவில்லை. என் அப்பா உடல்நிலை சரியில்லாமல் தான் இறந்து விட்டதாக என்னிடம் சொன்னார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என் கணவர் என் அப்பாவை அடித்து கொன்றுவிட்டதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். ஆனால் என் அப்பா உடல் நிலை சரியில்லாமல் தான் இறந்து விட்டார்.

<u>சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் போலிசார் விசாரணையில் 22.01.2022 தேதி காலை சுமார் 9 மணிக்கு நானும், என் கணவரும் என் அப்பா, என் அம்மா ஆகியோர் என் வீட்டில் இருந்த போது, என் தங்கை மகன் அவர் மனைவியுடன் வந்து என் கணவர் சின்னசாமியிடம் அவனின் மோதிரத்தை அடமானம் வைக்க வாங்கி சென்றதை கேட்ட போது தெவிடியா பையா எனது மோதிரத்தை கொடுங்க என்று கேட்டார். அதற்கு என் கணவரை பார்த்து தெவிடியா பையா என் மகனை போய் கேளுடா என்ற அசிங்கமாக திட்டினார். அப்போது என் அப்பா சின்னவர் என்பவர் என் கணவர் சின்னசாமியை பார்த்து கடன் வாங்கின திருப்பி குடுக்க வேண்டும் என்று சொன்னார். பிறகு செல்வராஜ் வீட்டு முன்பு இருந்த என் அப்பா சின்னவரை என் கணவர் சின்னசாமி தெவிடியா பையா நீ என்ன உன் பேரனுக்கு சப்போட்டா என்று கேட்டு கீழே கிடந்த மூங்கில் கொம்பால் என் அப்பாவின் இடது கால் மீது அடித்தார். என் அப்பா மயங்கி கீழே விழுந்தவரை பாத்து என் கணவர் சின்னசாமி கையில் வைத்திருந்த மூங்கில் கோலை காட்டி இனிமேல் நகை பற்றி பேசினால் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டினார். என் அப்பா மயங்கி கிடந்தவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் என் தங்கை மகன் சேர்த்தாகவும் 04.02.2022 தேதி காலை 9.30 மணிக்கு என் அப்பா சிகிச்சை பலனில்லாமல் இறந்து விட்டார் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரி என்னுடைய கணவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -</u> இல்லை.

P REVATHY
Digitally signed by P REVATHY
DN: cn=P REVATHY, ou=VELLORE, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN

Additional District Judge (FTC),
Vellore.